# 2012

# කාර්යසාධන වාර්තාව
## செயலாற்றுகை அறிக்கை
## PERFORMANCE REPORT

මහා භාරකාර දෙපාර්තමේන්තුව

பொது நம்பிக்கை பொறுப்பு திணைக்களம்

Department of Public Trustee



́இந்த நாட்டின் சுதந்திரம் மீயுயர்வானது. நான் பிரிவினைவாதத்திற்கு ஒருபோதும் இடமளியேன். நான் எமது நாட்டின் பொது மக்களின் பொதுவான ஏற்றுக்கொள்ளல்களை அழிப்பதற்கு எவரையும் அனுமதியேன். எமது பண்பாடு ́மேதா, முடித,கருணா̂ என்பதனூடாக கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அதற்கான அத்திவாரம் மனிதர்களை நோக்கி மட்டுமல்ல விலங்குகள், மரங்கள்,மற்றும் éமியையும் நோக்கி பரவியுள்ள ́ஆமத் சித்த̂ (மனிதனில் அன்பு, ஆதரவு) என்பதாக இருந்தது. பல காரணங்களினால் சிதறிக் கிடக்கின்ற இந்த மனங்களை மீண்டுமொருமுறை ஒரே தேசிய குறிக்கோள் என்பதனை நோக்கி கொண்டுவருவதே எனது எதிர்பார்ப்பாகும்.அனைவரது தேசியம், சமய அடையாளத்திற்கு மதிப்பளிக்கின்ற, ஏனையவர்களைக் காயப்படுத்துவதிலிருந்தும், ஒருவரது அதிகாரத்தைப் பயன்படுத்துவதிலிருந்து விலகியிருக்கின்ற தனிநபர்களை அதே போன்று சமூக சுதந்திரத்தைப் பாதுகாக்கின்ற புதியசமூகமொன்றை உருவாக்குவதே எனது அவாவாகும்

மஹிந்த சிந்தனை,எதிர்கால தொலைநோக்குé é é é .

தொலைநோக்கு

கொடைவள்ளல் செல்வந்தர்கள் பொதுநம்பிக்கை பொறுப்பாளரில் கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் பல்வித விடயங்களுக்காக வழங்கப்படும் நன்கொடை நிதிÆஆதனம் சம்பந்தப்பட்ட ஸ்தாபகர்கள், மரணசாதனக்காரர், மற்றும் பொது மக்களின் அபிலாசைகள் மற்றும் தேவைகளை திருப்திகரமான முறையில் சட்ட வரையறைக்குள் அனைவருக்கும் உச்ச பலன் கிடைக்கும் விதத்தில் விசுவாசமுள்ள நம்பிக்கைப் பொறுப்பாளராகச் செயற்படுதல்

செயற்பணி

திணைக்களத்திற்கு வழங்கப்படும் ஆதனம்,மரணச்சொத்து நட்டஈடு நிதி தொழிலறிவு மற்றும் நிபுணத்துவத்தை பரிபாலித்தல் முகாமைத்துவம் செய்தல், முதலீடு செய்து அதன் பயனாளி Æஉரித்தாளிÆதங்கிவாழ்பவர்Æகிடைக்கும் என்னும் நம்பிக்கையுடன் வாழ்பவர்கள் போன்றவர்களுக்கு செயற்திறன் மற்றும் பலன்தரும் சேவையை வழங்குதல்

பொது நம்பிக்கையாளர் பதவியும் சட்ட வல்லமையும்

1931ம் ஆண்டின் 11ம் இலக்க 1938ம் ஆண்டின் 59ம் இலக்க கட்டளைச்சட்டத்தினாலும் 1973ம் ஆண்டின் 44ம் இலக்க மற்றும் 1975ம் ஆண்டின் 25ம் இலக்க விதியாலும் 1983ம் ஆண்டின் 44ம் இலக்க மற்றும் 1988ம் ஆண்டின் 61ம் இலக்க சட்டத்தாலும் திருத்தப்பட்ட 1922ம் ஆண்டின் 1ம் இலக்க பொது நம்பிக்கை பொறுப்பு கட்டளைச்சட்டத்தால் இலங்கையினுள் பொது நம்பிக்கையாளர் பதவியை சுயாதீனமாக தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு பொது முத்திரையுடன் தாபிக்கப்பட்டுள்ளதோடு அப் பதவியின் பெயரால் வழக்கு தொடுக்கவும் வழக்காடுவதற்கும் சட்ட வல்லமை உள்ளதாகும்

இப்பதவிக்கு மேலதிகமாக பிரதி பொது நம்பிக்கையாளர் இருவர் மேற்குறித்த சட்டத்தின் வாயிலாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது

சட்டரீதியான விடயங்களை நிறைவேற்றும் அப் பதவிக்காக உத்தியோகத்தர்களை தெரிவுசெய்து நியமிக்கையில் முக்கியமான தகைமை சட்டத்தரணியாயிருத்தலாகும்

சட்ட பின்புலம்

1931ம் ஆண்டின் 11ம் இலக்க 1938ம் ஆண்டின் 59ம் இலக்க கட்டளைச்சட்டத்தினாலும் 1973ம் ஆண்டின் 44ம் இலக்க மற்றும் 1975ம் ஆண்டின் 25ம் இலக்க விதியாலும் 1983ம் ஆண்டின் 44ம் இலக்க மற்றும் 1988ம் ஆண்டின் 61ம் இலக்க சட்டத்தாலும் திருத்தப்பட்ட 1922ம் ஆண்டின் 1ம் இலக்க பொது நம்பிக்கை பொறுப்பு கட்டளைச்சட்டத்தால் இலங்கையினுள் பொது நம்பிக்கையாளர் பதவியை சுயாதீனமாக தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு பொது முத்திரையுடன் தாபிக்கப்பட்டுள்ளதோடு குறித்த கட்டளைச்சட்டத்தற்கு அமைய நிறுவனம் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் கட்டுப்படுத்தப்படும்

நம்பிக்கை சம்பந்தமாக பொது நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளைச்சட்டத்திற்கு மேலதிகமாக 1918 ம் ஆண்டின் 04ம் இலக்க, 1934ம் ஆண்டின் 1ம் இலக்க கட்டளைச் சட்டத்தின் மூலமும் 1968 ம்ஆண்டின் 7ம் இலக்க மற்றும் 1971ம் ஆண்டின் 30ம் இலக்க சட்டத்தினாலும்

திருத்தப்பட்ட 1917ம் ஆண்டின் 9ம் இலக்க நம்பிக்கை பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் அதிகாரம் நடைமுறையிலிருப்பதோடு அச் சட்டம் நிசப்பதமாயிருக்கும் சந்தர்ப்பத்தில் ஆங்கில ஒப்புரவு (Law of Equity) பிரயோகிக்கப்படும்

கடமைகள்

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச்சட்டம், குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை, நீதிமன்ற அமைப்புமுறை சட்டம் மற்றும் வேறு எழுத்துமூல விதிகளின்படி கீழ் காணப்படும் கடமைகள் பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ளது

1. சாதாரண நம்பிக்கைப் பொறுப்பாளர், பாதுகாப்பு வழங்கும் நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது பாதுகாப்பான நம்பிக்கைப் பொறுப்பாளராக செயற்படுதல்

2. சொத்து திரட்டல் கட்டளையின் கீழ் சொத்து திரட்டல்

3. பராயமடையாத ஒருவரின் சொத்து நம்பிக்கைப் பொறுப்பாளராக அல்லது உதவு நண்பனாக (பாதுகாப்பு முகாமையாளராக) செயற்படுதல் (மாவட்ட நீதிமன்றினால் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில்)

4. மனவளர்ச்சி குன்றிய நபரின் சொத்த முகாமையாளராக செயற்படுதல் (மாவட்ட நீதிமன்றினால் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில்)

5. அசையா சொத்தின் ஒப்பந்த முகாமையாளராக செயற்படுதல்
(பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பாளராக செயற்படும்போது அப் பொறுப்புக்கு நியமிக்கப்பட்ட ῆம்பிக்கை சபைÕ யால் காலத்திற்கு காலம் எடுக்கப்படும் தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு மட்டும் பாதுகாப்பு நம்பிக்கைப் பொறுப்பாளர் பிணிக்கப்படுகின்றார்)

6. வெளிநாட்டிலுள்ள இலங்கையர் ஒருவருக்கு அட்டோனி தத்துவக்காரராக அவருக்கு கொடுக்கப்படவேண்டிய பணத்தை பெற்றுக்கொள்ள அல்லது செலுத்த நடவடிக்கை எடுத்தல்

7. குடியியல் நடைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளின் கீழ் கௌரவ நீதிமன்றால் சொத்து சம்பந்தமாகவும் மற்றும் வேறு விடயங்கள் சம்பந்தமாகவும் செயற்படுதல்

8. கௌரவ நீதிமன்றால் கையேற்கும் சந்தர்ப்பத்தில் மரண சாதனமற்ற நபரின் நிருவாகியாக செயற்படுதல்

9. நீதிமன்ற அமைப்பு முறைச் சட்டத்தின் கீழ் சொத்து சேகரிப்பாளராகச் செயற்படுதல்

10.குற்றம் புரிந்தமைக்காக சிறையிலிடப்பட்டுள்ளவரின் சொத்துக்கு முகாமையாளராகச் செயற்படுதல்

11. எந்தவொரு தனிப்பட்ட நபரின் மரணசாதன பத்திரத்தை பாதுகாப்பாளராக செயற்படுதல்

12. விகாரைக்குரிய சொத்துக்களின் பொறுப்பாளராக செயற்படுதல்

மேற்குறித்த கடமைகளைவிட வேறு விடயங்களில் பொது நம்பிக்கைப்பொறுப்பாளரின் தலையீடுகள்

பொது நம்பிக்கை பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தின் பின் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களுக்கு அமையவும் வேறு எழுத்துமூல விதிகளுக்கு அமையவும் வழங்கப்பட்டுள்ள வேறு கடமைகள்

- 1988ம் ஆண்டின் 61ம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச்சட்டத்தின் 10(அ) பிரிவிற்கு அமைய பணிபுரிவதற்காக வெளிநாட்டில் இருப்போர், வெளிநாட்டில் இருக்கும்போது மரணித்தால் அவர்களுககாக வழங்கப்படும் நட்டஈடு தங்கிவாழ்பவர்களும்Æஅல்லது சட்டப்படியான வாரிசுகளுக்கிடையே பங்கீடு செய்யும் செயற்பாட்டை சரியான முறையில் பிழையின்றி நடத்துவது மற்றும் அக் கடமையை இலகுபடுத்தும் முகமாக சம்பந்தப்பட்ட பணிபுரிவர்களை பதிவுசெய்தல்
- 1944ம் ஆண்டின் 42ம் இலக்க விகாரையின் காணி (நட்டஈடு) கட்டளைச் சட்டத்தை செயற்படுத்தல்
- 1981ம் ஆண்டின் 42ம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1931ம் ஆண்டின் 19ம் இலக்க பௌத்த விகாரை தேவாலகம சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள கடமைகளைப் புரிதல்
- 1973ம் ஆண்டின் 28ம் இலக்க ஐக்கிய புதினப்பத்திரிகை நிறுவனத்திலுள்ள பங்குகளுக்கு அரசின் சார்பில் நம்பிக்கைப் பொறுப்பாளராகச் செயற்படுதல்

பொது நம்பிக்கைப் பொறுப்பாளரால் ஆற்றப்பட்ட கடமைகள்

இத் திணைக்களம் தாபிக்கப்பட்டு அதன் நம்பிக்கை பொறுப்பின் நோக்கத்திற்கு அமையÆமரணசாதன பத்திரத்தின் நோக்கத்திற்கு அமையÆநீதிமன்ற கட்டளைப் பிரகாரம் கீழே காணப்படும் விடயங்களில் செயற்பட்டு மக்களுக்கு சேவை வழங்கப்படுகிறது

- மிக நெருக்கடியான நிதிச்சூழலில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு உபயம் அளிக்கும் வகையில் புலமைப்பரிசில் வழங்குதல்
- நிராதரவான மற்றும் திடீர் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொடுக்கும் பொருட்டு மருத்துவ உதவிகளை வழங்குதல்
- வழிபாட்டுத் தலங்களை பேணுவதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமாக ஏற்படுத்தப்பட்டுள்ள நம்பிக்கை பொறுப்பு நோக்கங்களுக்கு நிதியுதவி வழங்குதல்
- அறக்கொடை தொடர்பான செயற்பாடுகள்
- பல்வித காரணங்களினால் வாழ்வில் நலிவடைந்த ஆதரவற்ற நபர்களுக்கு அத்தகைய நபர்களைக் கொண்டுள்ள நிறுவனங்களுக்கு நன்கொடை வழங்குதல்

- விகாரை தேவாலகம சட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் கையேற்கப்பட்ட அசையாச் சொத்திற்கு நட்டஈடு பௌத்த விவகார ஆணையாளர் நாயகத்தின் பரிந்துரைக்கு அமைய பகிர்ந்தளித்தல்
- நம்பிக்கைப் பொறுப்புÆமரணச்சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல்
- நிதி நெருக்கடிகளுக்கு மத்தியில் கல்விகற்கும் ஆற்றலுள்ள மாணவர்களுக்கு உபயம் அளிக்கும் நோக்கில் தாபிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்புக்களிலிருந்து பெறப்படும் வருமானத்திலிருந்து புலமைப்பரிசில்களை வழங்குதல்
- வரையறுக்கப்பட்ட ஐக்கிய புதினப்பத்திரிகை நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு இருவரையும் தலைவரையும் நியமித்தல்
- வெளிநாட்டு நட்டஈட்டை பகிர்ந்தளித்தல்
- விகாரை நட்டஈட்டை பகிர்ந்தளித்தல்
- அரச நிறுவனமாக சம்பாதித்த வருமானத்தில் சதவிகிதத்தை அரச திறைசேரிக்கு வழங்குதல்
  (2013ம் ஆண்டில் ரூபா 6,543,360.52 வழங்கப்பட்டது)

நம்பிக்கை பொறுப்பு மரணச்சொத்தின் எண்ணிக்கை

31-12-2012 ம் திகதியன்று திணைக்களத்தில் தாபிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பின் எண்ணிக்கை 999 ஆயிருப்பதுடன் திணைக்களத்தால் பேணப்படும் மரணச்சொத்தின் எண்ணிக்கை 126 ஆகும். நம்பிக்கைப் பொறுப்பை ஆரம்பித்த தனவந்தர்களின் நோக்கங்களுக்கு அமைய குறித்த செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டன.

| வருடம் | நம்பிக்கைப் பொறுப்பு எண்ணிக்கை | மரணச் சொத்து எண்ணிக்கை |
|---|---|---|
| 2010 | 957 | 115 |
| 2011 | 981 | 119 |
| 2012 | 999 | 126 |

அரச திறைசேரிக்கு வழங்கிய நிதித்தொகை

| வருடம் | நிதித்தொகை |
|---|---|
| 2010 | 4,237,608.18 |
| 2011 | 3,783,187.40 |
| 2012 | 6,543,360.52 |

31-12-2012 ம் தினத்தன்று திணைக்களத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் விபரங்கள்

| தொடர் இல. | பதவி | உரிய சேவை | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் | திணைக்களம் | 01 | 01 | |
| 02 | பிரதி நம்பிக்கைப் பொறுப்பாளர் | திணைக்களம் | 02 | 01 | 01 |
| 03 | பிரதம கணக்காளர் | இலங்கை கணக்காளர் சேவை (வகுப்பு I) | 01 | 01 | -- |
| 04 | கணக்காளர் | இலங்கை கணக்காளர் சேவை (வகுப்பு I/II) | 01 | -- | 01 |
| 05 | உள்ளக கணக்காய்வாளர் | இலங்கை கணக்காளர் சேவை (வகுப்பு I/II) | 01 | -- | 01 |
| 06 | நிருவாக உத்தியோகத்தர் | அரச முகாமைத்துவ சேவை (உயர் வகுப்பு) | 01 | 01 | -- |
| 07 | அபிவிருத்தி உதவியாளர் | தொடர்புபட்ட அலுவலர்கள் | 07 | 07 | -- |
| 08 | மொழிபெயர்ப்பாளர் | மொழி பெயர்ப்பாளர் சேவை | 01 | -- | 01 |
| 09 | அரச முகாமைத்துவ உதவியாளர் | அரச முகாமைத்துவ சேவை | 28 | 27 | 01 |
| 10 | அலுவலக உதவியாளர் சேவை | அலுவலக உதவியாளர் சேவை | 13 | 08 | 05 |
| 11 | சாரதிகள் | சாரதி சேவை | 4 | 1 | 3 |
| 12 | எழுதுவினைஞர் | திணைக்களம் | 3 | 2 | -- |
| 13 | சுருக்கெழுத்தாளர் | திணைக்களம் | 1 | 1 | - |
| மொத்தம் | | | 64 | 50 | 13 |

❖ திணைக்கள எழுதுவினைஞர் பதவிக்கு அங்கீகாரம் கிடைத்தது அப் பதவி வெற்றிடமானதின் பின் மீண்டும் கூப்பிடுவதற்கு அங்கீகாரம் கிடைக்காததினாலாகும்



இத் திணைக்களத்தின் பாதுகாப்பிலுள்ள நம்பிக்கை பொறுப்பும் மற்றும் மரணச்சொத்தின் கீழ் 31Æ12Æ2012 திகதியன்று செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

| விபரம் | ஒதுக்கப்பட்ட நிதி (ம்000) | செயற்பாடு |
|---|---|---|
| கல்வி | 3,384 | குறைந்த வருமானமுடைய குடும்பங்களில் உள்ள ஆற்றல்மிக்க சிறார்களுக்கு அவர்கள் உயர்தரம் வரை கல்விகற்பதற்கு ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ.300 வீதம் 727 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன |
| உயர் கல்வி | 1,212 | குறைந்த வருமானமுடைய குடும்பங்களில் உள்ள ஆற்றல்மிக்க சிறார்களுக்கு அவர்கள் பல்கலைக்கழக கல்விகற்பதற்காக ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ.500 வீதம் 295 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன |
| நோயாளிகளுக்கு வைத்திய உதவிகளை வழங்குதல் | 3,289 | இதன் கீழ் அநாதாரவான 180 சிறுநீரக, இருதய மற்றும் புற்றுநோயாளிகளுக்கு நன்கொடை வழங்கப்பட்டுள்ளன |
| சமய விவகாரங்கள் | 1,305 | வணக்க தலங்களைப் பராமரித்தல் மற்றும் அவைகளின் அபிவிருத்திக்காக 504 வணக்கதலங்களுக்கு நன்கொடை வழங்கப்பட்டுள்ளதோடு இந் நோக்கத்திற்காக 342 பொறுப்பு நிதியங்கள் மற்றும் 9 மரணசொத்துக்கள் கொடைவள்ளல்களால் தாபிக்கப்பட்டுள்ளன |
| வெளிநாட்டு நட்டஈடு | 187,487 | வெளிநாடுகளில் மரணித்த நட்டஈட்டை அவர்களின் வாரிசுகளுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது |
| நிவாரண நன்கொடை | 1,051 | பொருளாதாரத்தால் மிகவும் நலிவடைந்தவர்களுக்கும் பொருளாதாரப் பிரச்சினைக்குட்பட்ட விகாரைகளுக்கும் சமய கொண்டாட்டங்களுக்காக 238 நன்கொடைகள் வழங்கப்பட்டுள்ளன |
| விகாரைகளுக்கு நட்டஈடு வழங்குதல் | 43,131 | விகாரைகளுக்குச் சொந்தமான காணிகளை அரசு உடைமை கொள்ளும்போது கிடைக்கும் நட்டஈட்டுத்தொகையில் 47 விகாரைகளை புனர்நிர்மாணம் செய்வதற்காக நிதி விடுவிக்கப்பட்டுள்ளது |

<u>2012ம் ஆண்டின் விகாரைகளுக்கான நன்கொடைகள்</u>

| மரணச்சொத்து | தொகை (ரூபா) | விகாரைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| சிறிமத் டி.பி. ஜயதிலகவின் மரணச்சொத்து | 765,000.00 | 06 |
| வணிகசூரியவின் மரணச்சொத்து | 4,833,200.00 | 115 |
| மொத்தம் | 5,298,200.00 | 121 |

| மரணச்சொத்து | தொகை (ரூபா) | விகாரைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| சமய சமூக சேவைகள் பொது நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 4,905,000.00 | 41 |
| மொத்தம் | 4,905,000.00 | 41 |

அரசினால் வழங்கப்படும் நிதி ஏற்பாடுகளினால் நிறைவேற்றப்படும் செயல்கள்

| விடய இல. | விடய விபரணம் | நிரந்தரமான நிதி | 31/12/2012 இல் மொத்தச் செலவு | மிகுதி நிதி |
|---|---|---|---|---|
| | <u>மீண்டெழும் செலவீனம்</u> | | | |
| 1001 | சம்பளங்களும் வேதனங்களும் | 12,000,000/- | 11,918,792.81 | 81,207.19 |
| 1002 | முற்பணமும் விடுமுறை காலச் சம்பளமும் | 440,000/- | 417.614.80 | 22,385.20 |
| 1003 | வேறு படிகள் | 5,200,000/- | 6,698,456.91 | (1,498,456.91) |
| 1101 | உள்நாடு | 250,000/- | 249,923.63 | 76.37 |
| 1102 | வெளிநாடு | - | - | - |
| 1201 | காகிதாதிகளும் அலுவலக உபகரணங்களும் | 750,000/- | 731,444.04 | 18,555.96 |
| 1202 | எரிபொருள் | 1,200,000/- | 1,167,528.00 | 32,427.00 |
| 1203 | உணவு பானம் மற்றும் சீருடை | 11,524/- | 11,523.50 | 0.50 |
| 1301 | வாகனங்கள் | 245,820/- | 245,819.63 | 0.37 |
| 1401 | போக்குவரத்து | - | - | - |
| 1402 | தபால் மற்றும் தொலைத் தொடர்பாடல் | 850,000/- | 839,215.03 | 10,784.97 |
| 1403 | மின்சாரம் மற்றும் நீர் | 600,000/- | 583,921.91 | 16,078.09 |
| 1404 | வாடகை மற்றும் உள்@ராட்சி நிறுவனங்கள் | 5,400,000/- | 5,400,000/- | -- |
| 1405 | வேறு | 830,500/- | 823,223.48 | 7,276,52.00 |
| 1506 | ஆதனக்கடன் வட்டி | 218,052/- | 218.051.24 | 0.76 |
| 1509 | நட்டங்கள் மற்றும் பதிவழிப்பு | 8,152/- | 8,152.00 | |
| | மொத்தம் -மீண்டெழும் செலவீனம் | 28,128,191/- | 29,437,809.38 | 188,838.53 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2001 | கட்டிடங்கள் மற்றும் நிருமாணம் | 121,000/- | 100,511.57 | 20,488.43 |
| 2002 | இயந்திரமும் உபகரணமும் | 100,000/- | 56,910.75 | 43,089.25 |
| 2003 | வாகனங்கள் | 200,000/- | 183,775.55 | 16,224.45 |
| 2102 | வீட்டுப் பொருட்களும் அலுவலக உபகரணங்களும் | 194,027/- | 194,026.60 | 0.40 |
| 2013 | இயந்திரமும் உபகரணங்களும் | 170,282/- | 159,015.00 | 11,267.00 |
| 2104 | பயிற்சியளித்தல் மற்றும் தொழில் விருத்தியும் | 58,500/- | 58,500.00 | -- |
| | மூலதன மொத்தம் | 843,809/- | 752,739.47 | 91,069.53 |
| | முழு மொத்தம் | 28,972,000 | 30,190,548.85 | 279,908.06 |

அரச வருடாந்த வரவு- செலவுத்திட்ட அறிக்கையிலிருந்து கடந்த மூன்றாண்டுகளுக்கான ஒதுக்கீடு

<u>நிதிசார் முன்னேற்றம்</u>

| | நிகர ஒதுக்கீடு | செலவீனம் |
|---|---|---|
| 2010 | | |
| மீண்டெழுவது | 28,774,000 | 27,899,283 |
| மொத்த மூலதனம் | 6,073,000 | 5,768,922 |
| முழு மொத்தம் | 34,847,000 | 33,668,205 |
| | | |
| 2011 | | |
| மீண்டெழுவது | 29,737,383 | 29,301,643 |
| மொத்த மூலதனம் | 1,383,617 | 1,295,184 |
| முழு மொத்தம் | 31,121,000 | 30,596,827 |
| | | |
| 2012 | | |
| மீண்டெழுவது | 29,850,648 | 29,716,129 |
| மொத்த மூலதனம் | 922,809 | 763,739 |
| முழு மொத்தம் | 30,773,457 | 30,479,868 |